ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1720/41 - 2011 අගෝස්තු 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.08.25
*1720/41 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*சீ.எப்.1/64.*

*2011 இன் இல. 364/2*

**2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள்**

*புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் நியமனம்*

*2005, ஓகத்து 13 ஆந் திகதிய 1405/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2அ என்னும் பிரிவினது ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு வலுவிலுள்ளனவாகக் கருதப்பட்டவையுமான 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளின் 22 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக இலங்கை முழுவதற்குமான புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியாகவிருப்பதற்கென மேஜர் ஜெனரல் லபுதலே வளவ்வே சந்தன புவனெக்க பண்டார ராஜகுரு,* RWP, RSP, USP, Ldmc *என்பவரை 2011, ஓகத்து 15 ஆந் திகதியிலிருந்து இத்தால் நியமிக்கின்றேன்.*

*2010, மே 6 ஆந் திகதிய 1652/58 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2011, ஓகத்து 25.*